Australian Government
Department of Education, Skills and Employment

# ‘கொரோனா வைரஸ் (கோவிட்-19)’-ஐப் பற்றிய தகவல்களும் பாடசாலைகளும் - பெற்றோர்கள் மற்றும் மாணவ-மாணவியருக்கான தகவல்கள்

மத்தியக் கூட்டரசு, மாநில மற்றும் எல்லைப்பகுதி அரசுகள் போன்ற அனைத்து ஆஸ்திரேலிய அரசுகளும் கல்வியின் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்றன, மற்றும் ‘கோவிட்-19’ பெருந்தொற்றுக் காலத்தில் மாணவ-மாணவியரது கல்விக்கு ஆதரவுதவியாக இருப்பதில் பற்றுறுதி கொண்டுள்ளன.

மாநில மற்றும் எல்லைப்பகுதி அரசுகளும், அரசு சாராப் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் அவர்களது பாடசாலைகளுக்கான செயலாக்க முடிவுகளை மேற்கொண்டு அவற்றினை நிர்வகிப்பதற்கான பொறுப்புகளைக் கொண்டிருப்பர். ‘கோவிட்-19’ சூழ்நிலையில் உங்களது பகுதியிலுள்ள பாடசாலைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பற்றியத் தகவல்களைத் தெரிந்துகொள்ளத் தயவு செய்து முதலில் உங்களுடைய பாடசாலையுடன் தொடர்புகொள்ளுங்கள், மற்றும் உங்களுடைய மாநில அல்லது எல்லைப்பகுதி அரசினது அறிவுரைகளைப் பின்பற்றுங்கள். மாநில மற்றும் எல்லைப்பகுதி அரசுகளின் கல்வி வலைத்தளங்களுக்கான இணைப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

- Australian Capital Territory
- New South Wales
- Northern Territory
- Queensland
- South Australia
- Tasmania
- Victoria
- Western Australia

‘கோவிட்-19’ நோய்த்தொற்று குறித்த நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பதைப் பற்றிய முடிவுகளை எடுப்பதில் பாடசாலைகள் தொடர்ந்து தேசிய மற்றும் மாநில பொது சுகாதாரம் மற்றும் கல்வித் துறை வல்லுநர்களது அதிகாரபூர்வமான அறிவுரைகளின் பிரகாரம் செயல்பட வேண்டும் என்று மாநில மற்றும் எல்லைப்பகுதி அரசுகள் ஒத்துக்கொண்டுள்ளன.

## பாடசாலைகளில் ‘கோவிட்-19’ நோய்த்தொற்று பரவுவதற்கான ஆபத்தினைக் குறைத்தல்

பாடசாலைகளில் ‘கோவிட்-19’ நோய்த்தொற்று பரவுவதற்கான ஆபத்தினைக் குறைப்பது சம்பந்தமான சுகாதார அறிவுரை-யை ‘ஆஸ்திரேலிய சுகாதரப் பாதுகாப்பு தலைமைக் குழு’ (Australian Health Protection Principal Committee (AHPPC)) **24 ஏப்ரல் 2020** அன்று வெளியிட்டுள்ளத)(health advice). ‘கோவிட் 19’ பெருந்தொற்றுக் காலத்தில், பாடசாலைகளில் கொரோனா வைரஸ் (கோவிட்-19) பரவுவதற்கு இப்போதுள்ள குறைந்த அளவிலான ஆபத்தினை இன்னும் குறைப்பதற்காக, பிள்ளைகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் உதவி ஊழியர்கள் ஆகியோருடன் இணைவாய்ப் பணியாற்றும் பாடசாலைத் தலைவர்களுக்காக இந்த நடைமுறை சார்ந்த வழிகாட்டியும் அறிவுரையும் ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது.

சுருக்கமாகச் சொல்லுவதானால், கருத்தில் கொள்ளவேண்டிய விடயங்களில் பின்வருவன உள்ளடங்கும்:

- **பெற்றோர்களுக்கு:** உங்கள் பிள்ளைக்கு சுகவீனமாக இருந்தால் அவர்கள் கட்டாயமாகப் பாடசாலைக்கு வரக்கூடாது. நீங்கள் கட்டாயமாக அவர்களை வீட்டிலேயே மற்றவர்களிடமிருந்து விலக்கி வைதிருக்கவேண்டும். உங்கள் பிள்ளைகளைப் பாடசாலயில் இறக்கி விடும் நேரம் மற்றும் அங்கிருந்து அவர்களை ஏற்றிச் செல்லும் நேரம் ஆகியன உள்ளடங்க, பாடசாலையில் இருக்கும்போது மற்றப் பெற்றோர்களிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் ஒதுங்கியிருந்து உடல்ரீதி விலகலைப் பின்பற்றவேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- **பிள்ளைகளுக்கு:** உங்களுக்கு சுகமில்லாமல் இருப்பதைப் போல இருந்தால், உங்களுடைய பெற்றோர், பாதுகாவலர் அல்லது ஆசிரியரிடம் சொல்லுங்கள்.
- **ஆசிரியர்களுக்கு:** நீங்கள் சுகமில்லாமல் இருந்தாலோ, நீங்கள் பாதிப்பிற்கு ஆளாகும் நபர்கள் வகையைச் சேர்ந்தவராக இருந்தாலோ வேலைக்கு வராதீர்கள்.
- **அனைத்து வயது வந்தோருக்கும்:** பாடசாலைச் சூழலில், வயதுவந்த்தோருக்கு இடையேதான் நோய்த்தொற்று பரவுவதற்கான பெரும் ஆபத்து இருக்கிறது. பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒருசேர பாடசாலையில் இருக்கும்போது தமக்கிடையே உடல் ரீதியான விலகலைப் பின்பற்ற வேண்டியது அதியுயர் முக்கியத்துவம் கொண்டதாகும்.

### சுகாதாரப் பழக்கவழக்கங்கள்

பின்வரும் விடயங்கள் மாணவ-மாணவியருக்கு நினைவூட்டப்படுகின்றன:

- சாப்பிடுவதற்கு முன்பு, சாப்பிட்ட பிறகு மற்றும் கழிவறையை உபயோகித்த பிறகு ஆகிய வேளைகள் உள்ளடங்க,  சோப்பு மறும் தண்ணீரைப் பாவித்துக் கைகளை அடிக்கடிக் கழுவுங்கள்.
- கைச் சுத்திகரிப்பானைப் பயன்படுத்துங்கள்.
- உங்களுடைய இருமல்களையும், தும்மல்களையும் உங்களுடைய புஜம் அல்லது திசுத்தாள் ஒன்றைக் கொண்டு மூடுங்கள் (கைகளால் அல்ல).
- பயன்படுத்திய திசுத்தாளை உடனே குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டுக் கைகளைக் கழுவுங்கள்.
- உங்களுடைய வாய், அல்லது முகத்தைத் தொடாமலிருக்க முயற்சி செய்யுங்கள்.
- மற்றவர்களுடைய கைகளைப் பிடிக்காதீர்கள், அல்லது மற்றவர்களுடன் கை குலுக்காதீர்கள்.
- உங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே வழக்கத்தை விட அதிக இடைவெளி விட முயற்சி செய்யுங்கள்.
- வரிசையில் நிற்பதைத் தவிருங்கள்.
- உங்களுக்குப் படபடப்பாக இருந்தால் மற்றவர்களது உதவியை நாடுங்கள்.

## சீனியர் செகண்டரி மாணவ-மாணவியருக்கான ஏற்பாடுகள் மற்றும் பல்கலைக்கழக சேர்க்கைகள்

சீனியர் செகண்டரி (Year 12) வகுப்பில் பயிலும் மாணவ-மாணவியர்களால் இந்த ஆண்டு 'சீனியர் செகண்டரி கல்விச் சான்றித'ழைப் பெற முடியும் என்றும், பல்கலைக்கழகக் கல்வி, மேல் படிப்பு மற்றும் வேலை ஆகியவற்றிற்கு இந்தச் சான்றிதழ் வகை செய்யும் என்றும் 7 ஏப்ரல் 2020 அன்று மாநில மற்றும் எல்லைப்பகுதிக் கல்வி அமைச்சர்கள் ஒத்துக்கொண்டுள்ளனர்.

## NAPLAN

2020-ஆம் ஆண்டில் NAPLAN நடைபெறாது என்று கல்வி அமைச்சர்கள் முடிவு செய்துள்ளனர். மே மாதம் 12 -ஆம் திகதியில் இருந்து 22- ஆம் திகதி வரை NAPLAN நடைபெறுவதாக இருந்தது.

மாணவ-மாணவியரது பொதுநலன் மற்றும் கல்வியின் தொடர்ச்சி ஆகியவற்றின் மீது பாடசாலைப் பிரமுகர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆதரவுதவி ஊழியர்கள் ஆகியோர் கவனம் செலுத்த உதவுவதற்கு ஏதுவாக 2020-இல் NAPLAN -ஐத் தொடர வேண்டாம் என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாசிப்பு, எழுத்தாற்றல், மற்றும் மொழி மரபுகள் (எழுத்துக்கூட்டல், இலக்கணம் மற்றும் நிறுத்தக்குறியீடு) ஆகிய மூன்று எழுத்தறிவுப் பகுதிகளிலும், எண்ணறிவிலும் மாணவ-மாணவியரது திறன்களைச் சோதிக்கும் தேசிய மதிப்பீடே NAPLAN என்பதாகும். 2008-ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் NAPLAN மதிப்பீட்டு சோதனைகளை அனைத்து மாநில மற்றும் எல்லைப்பகுதி அரசுகளும் நடத்திவருகின்றன.